கடைப்பிடித்து, எங்கெங்கே சாத்தியமோ அங்கெல்லாம் விவசாய நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்று முக்கியமாகச் சொல்லியிருக்கிறது.

பஞ்சாயத்து அலுவலர்கள் (கன்னியாகுமரி மாவட்டம்)

*551 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பஞ்சாயத்துக்களில் வேலை செய்யும் (Upper Division and Lower Division) குமாஸ்தாக்களின் சம்பள விகிதங்கள் என்ன?

(இ) Pay Commission விகிதாசாரங்களின்படி இவர்களின் சம்பளம் திருத்தி அமைக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) குமரி மாவட்டத்து பஞ்சாயத்துகளில் மேல்நிலை குமாஸ்தாக்கள் இல்லை. அங்கு ரூ. 20—1—25 சம்பள விகிதத்தில் பஞ்சாயத்து உதவியாளர்களும், மாதம் ரூ. 15 நிலைச்சம்பளத்தில் பஞ்சாயத்து குமாஸ்தாக்களும் தான் இருந்தனர்.

(இ) ஆம்.

*552 Q.—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the scale of pay and allowances of the Panchayat Officers, Executive Officers, clerks and peons working in the various panchayats in Kanyakumari district have been revised and brought on a par with that of similar staff in the panchayats of the other districts in the Madras State?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கன்யாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்துகளில் பணிபுரியும் ஊழியர்களில் பஞ்சாயத்து ஆபீசர்களைத் தவிர மற்றவர்கள் விஷயத்தில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. பஞ்சாயத்து ஆபீசர்கள் விஷயமாக விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம்

*553 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்கம் டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டத்திற்காக அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளிலிருந்து எத்தனை (Heavy Tractors) வரவழைக்கப்பட்டன?

(இ) இதற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?

(உ) எத்தனை டிராக்டர்கள் வந்தன? அவை எங்கெங்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன?

23rd November 1963]

(எ) மேலும், எத்தனை டிராக்டர்கள் வரவேண்டும்? அவை எப்போது வரும்?

(ஐ) அவைகளை எந்தெந்த மாவட்டங்களில் பயன்படுத்த உத்தேசம்?

THE HON. SRI P. KAKKAN : (a) Eight tractors from United States of Amercia and twenty-one tractors from U.S.S.R. were imported during the years 1961–62 and 1962–63.

(b) The amount spent for the import of eight tractors from United States of America was Rs. 5,96,377.67 nP. and for the import of 21 tractors from U.S.S.R. Rs. 18,14,062.18 nP.

(c) All the eight tractors from United States of America and 21 tractors from U.S.S.R. have been received. They are being put to use in all the districts of the State except in the districts of Madras, the Nilgiris and Kanyakumari.

(d) No tractors are yet to be received. But it has been proposed to import 10 tractors from the U.S.S.R. during the current year. A contract in this regard has been signed with the Trade Representative of the U.S.S.R. in India at Madras on 20th August 1963. These 10 tractors are expected to be received during the first quarter of 1964.

(e) On receipt of new tractors, they will be allotted to the various districts considering the total demand in each district.

திரு. எம். தண்டாயுதபாணி : சர்க்கார் கொடுக்கும் இந்த டிராக்டர்களுக்கு வாடகைத் தொகை அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக அவைகளை அதிகமாக பயன்படுத்த முடியவில்லை. ஆகையால், அதைப் பரிசீலனை செய்து குறைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏராளமான டிராக்டர்கள் இந்த மகாணத்திற்கு வந்தபிற்பாடு, வாடகையைக் குறைப்பதுபற்றி யோசனை செய்யலாம்.

விவசாய வருமான வரி

* 554 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1962-63 பூராவிலும் விவசாய வருமான வரி மூலம் எவ்வளவு தொகை அரசாங்கத்திற்குக் கிடைத்தது?

(இ) விவசாய வருமான வரி வசூலுக்காக ஏற்படுத்தியுள்ள அலுவலர்களுக்காக 1962-63-ல் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ரூ. 1,16,21,139.92 நபை.

(இ) ரூ. 12,06,928.54 நபை.